1992 மார்ச் 9]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாவளத் தீவின் நம்பிக்கை நட்சத்திரம் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் குடுமியான்மலையில் உள்ள பண்ணையை மேம்படுத்த வேண்டுமென்பதற்காக ரூ. 88.38 இலட்சம் செலவில் இந்த அரசு அந்தப் பண்ணையை விரிவுபடுத்தி உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 134, டாக்டர் பெ. வீரபாண்டியன். மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

134—

செங்கத்தில் அரசு ஊழியர்களுக்கு வீடு.

*4431— டாக்டர். பெ. வீரபாண்டியன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கத்தில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்பெறும் ?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதி மிகவும் பிற்பட்ட தொகுதி. தாலுக்கா தலைமையிடமாக உள்ளது. பல்வேறு துறைகளில் அரசு ஊழியர்கள் கிட்டத்தட்ட 1,000 பேர்கள் பணியாற்றுகின்றனர். செங்கம் மிகவும் சிறிய நகரம். அங்கு வாடகைக்கு வீடுகள் கிடைப்பது மிகவும் அரிது. அதோடு செங்கத்திற்கு வந்து பணியாற்ற சிறந்த அரசு ஊழியர்கள் மறுத்துவிடுகிறார்கள். அங்கு வாடகைக்கு வீடுகள் கிடைப்பதில்லை என்பதால் வர மறுத்து விடுகிறார்கள். ஒருவேளை சிறந்த ஊழியர்கள் அங்கு வருவதாக இருந்தால் மாற்றல் வாங்கி அவர்களே சென்று விடுகிறார்கள்.........

[1992 மார்ச்]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாவிற்கு சம்பந்தம் இல்லாமல் போகிறீர்கள். அரசு ஊழியர்களுடைய நடத்தை பற்றி, ஆற்றல் பற்றி பேசக்கூடாது. உங்களுடைய துணைக் கேள்வியை மட்டும் கேளுங்கள்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாட்சியில் செங்கத்தில் தயவுகூர்ந்து அரசு ஊழியர்களுக்கு விரைவில் வீடு கட்டித் தந்து, ஒரு இன் சென்டிவ்வாக செங்கத்திற்குத் தரும்படி மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். இதை அரசு ஆராயுமா என்று அறிய விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆணைப்படி அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புத் திட்டங்களைப் பொறுத்த வரை, அதனைச் செயல்படுத்த மாவட்டத் தலைமையிடமும், வருவாய் கோட்டத் தலைமையிடமும் மட்டும்தான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அரசு அலுவலர்கள் குடியிருப்பு கட்ட அரசுக்குச் சொந்தமான நிலம், மற்றும் மாவட்ட ஆட்சியருடைய பரிந்துரை இருக்குமாயின், அரசு இதைக் கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 135, டாக்டர் ஜி. ஆர். மாலா, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர்.

135—

திருச்சி நகரில் பழுதடைந்த சத்துணவுக் கூடங்களைச் செப்பனிடுதல்.

*1796 டாக்டர் ஜி. ஆர். மாலா:

மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சி நகரின் பல்வேறு பகுதிகளில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் (I.C.D.S.) கீழ் இயங்கி வரும் சத்துணவுக்கூடங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு அறியும்.

(ஆ) அரசு துரித நடவடிக்கை எடுத்து வருகிறது.

சட்டமன்ற ... வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS